அசல் வழக்கு எண்.174/2020 வா.சா.1 தினேஷ் த/பெ செல்வம்

**28.03.2024 குறுக்கு விசாரணை தொடர்ச்சி..........**

26. லட்சுமி என் பாட்டி ஆவார். செல்வம் எனது அப்பா ஆவார். யோகானந்தத்தின் அப்பா தட்சிணாமூர்த்தி என்பவருக்கு சொத்தை விற்பதாக கூறி என் அப்பா செல்வம் ரூ.1,00,000/- முன் பணம் பெற்று கிரயஒப்பந்தம் போட்டு கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முன் பணமான அந்த ரூ.1,00,000/- வைத்துதான் என்அப்பா அடமான கடனை பைசல் செய்தார் என்றும் மேலும் என் பெயரில் ஒரு கிரயம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல.

27. 22.03.2004 தேதியில் இந்த முன் தொகையை வைத்துஎன் அப்பா ஒரு கிரயம் வாங்கினார் என்றால் இல்லை. 19.08.2005 தேதியில் என் அப்பா என்பெயரில் ஒரு கிரய பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தில் என் அம்மா எனக்கு பாதுகாவலராக நியமிக்கப் பட்டார் என்றால் சரியல்ல. 22.01.2001ல் என்அப்பா செல்வம் சுப்பிரமணி என்பவருக்கு அடமானம் ஒன்று போட்டு கொடுத்தார் என்றும் அந்த அடமானத்தை 14.10.2003ல் பைசல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

28. 22.03.2004ல் மேற்சொன்ன முன்தொகையை வைத்துதான் அன்னம்மாள் என்பவரிடம் இருந்து என் அப்பா செல்வம் சொத்து ஒன்றை கிரயம் வாங்கினார் என்றால் இல்லை. அவ்வாறு கிரயம் வாங்கிய அந்த சொத்தை தான் என்அப்பா என் பெயருக்கு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல.

29. 19.07.2001 தேதியில் வழக்கு சொத்து 6 மற்றும் 9வது அயிட்ட சொத்தை என் அப்பா அடமானம் போட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த அடமானத்தையும் என் அப்பா 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த தொகையிலிருந்து தான் பைசல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

30. 18.02.2008ல் என் பெயரில் கிரயம் எழுதி வைக்கப்பட்ட சொத்தினை என் அம்மா ஜெயலட்சுமி தனக்காகவும் மைனரான எனக்காகவும் சேர்த்து அடமானம் போட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் என் அப்பா அம்மா என் நலனுக்கு எதிராக செயல்பட்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

31. என் தாத்தா எனக்கு உயில் எழுதி வைத்த விவரம் எப்போது தெரியவந்தது என்றால் நான் 10ம் வகுப்பு அல்லது 12ம் வகுப்புபடித்து கொண்டிருந்தபோது எனக்கு தெரியவந்தது. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகலை ஜூலை 2020ம் ஆண்டு நான் தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றேன். தேதி நினைவில்லை.

32. வா.சா.ஆ.1 உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து குறித்து நான் வில்லங்கம் பார்த்தேனா என்றால் அதற்கான விளக்கம் எனக்கு தெரியவில்லை. உயில் சொத்து எழுதப்பட்ட தேதிக்கு முன்னிட்டோ அல்லது பின்னிட்டோ உயில் சொத்து சம்மந்தமாக வேறு ஆவணம் ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்று நான் பார்த்தேனா என்றால் இந்த உயில் ஆவணம் என் வழக்கறிஞர் மூலமாக தான்சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் பெற்றேன் அதனால் அது குறித்து மற்ற ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது

33. பலராம முதலியாருக்கு 3 மனைவிகள் என்றால் சரிதான். அவர்களில் 2 மனைவிகளை தான் நான் பார்த்துள்ளேன். முதல் மனைவி காமாட்சி என்றால் யார் முதல் மனவை யார் 2-ம் மனைவி என்று எனக்கு தெரியாது. லட்சுமி 2-ம் மனைவி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சாந்தி 3-ம் மனைவி என்றால், 3-ம் மனைவி என்று சொல்வார்கள் ஆனால் எனக்கு பெயர் தெரியாது. பலராமனின் 2 மனைவிகளை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான்.

34. என் தந்தை செல்வம் 2வது மனைவி லட்சுமியின் மகன் என்றால் லட்சுமியின் மகன் என்பது உண்மை. ஆனால் லட்சுமி 2வது மனைவியா என்று எனக்கு தெரியாது. லட்சுமிக்கு ஒரு மகன் மற்றும் 2 மகள்கள் உள்ளார்கள். காமாட்சிக்கு ஒரு மகள் மட்டும் உள்ளார். 3வது மனைவி சாந்திக்கும் குழந்தைகள் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

35. செல்வத்திற்கு கமலா மற்றும் ஜெயா என்கிற ஜெயலட்சுமி என்ற இரண்டு மனைவிகள் உள்ளார்கள் என்றால் இல்லை. ஒரே மனைவி தான் உள்ளார் அவர் பெயர் ஜெயலட்சுமி. என் அப்பாவின் முதல் மனைவி கமலா உயிருடன் இருந்தபோது தான் ஜெயலட்சுமியை என் அப்பா சேர்த்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது.

36. பொதுவாக கிரய பத்திரம் எழுதும்போது வழிகாட்டி மதிப்பீட்டின்படி தான்கிரய பத்திரம் எழுதப்படும் என்றும் சந்தை மதிப்பிற்கு எழுதப்படாது என்று சொன்னால் சரியல்ல. சந்தை மதிப்பில் தான் கிரய பத்திரம் எழுதப்படும். 1ம் பிரதிவாதி செல்வத்திடம் இருந்து கிரயம் பெறும்போது வழிகாட்டி மதிப்பு ரூ.1,50,000/- என்றும் ஆனால அந்த கால கட்டத்தில் சந்தை மதிப்பான ரூ.6,00,000/- கொடுக்கப்பட்டு தான் கிரயம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

37. 1ம் பிரதிவாதி என் அப்பாவிடம் வாங்கிய கிரயத்தொகை குடும்ப நலனுக்காகவும் குடும்ப கடன் பைசல் செய்வதற்காகவும், பிள்ளைகளின் நலனுக்காகவும் தான் கிரயம் கொடுத்து உள்ளார் என்றும் அவ்வாறு 1ம் பிரதிவாதி பெற்ற கிரயமானது நல்லெண்ண கிரயம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்று, வருவாய் துறை ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு அதன்பிறகு அவரது மனைவியான 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மென்ட் பத்திரம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. அது செல்லத்தக்க ஆவணம் அல்ல. உயில் முன்னிலைக்கு உரிமை கோருவது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

38. நான், என்அப்பா, என் அம்மா கூட்டு சதி செய்து சரியான பிரதிபலனுக்கு 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட கிரய சொத்தினை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என்ன என்றும், எங்கு உள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றும் பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் பொய்யான வழக்கு தாக்கல் செய்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட அசல் உயிலை தாக்கல் செய்யாதபட்சத்தில் நான் இந்த வழக்கையே முன்னெடுக்க முடியாது என்றால் சரியல்ல. பொய்யான வழக்கை தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிப்பதால் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு அதிகப்படியான இழப்பீடு கொடுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.